- 5 AUG 2009
PUBLIC LIBRARY
பொதுசன நூலகம்
நிலைவந்துறை படிப்பகம்
Nav

விலை ரூபா 15.00
REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876
இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு
பாதுகாவலன்
02-08-2009 PAATHUKAVALAN
மலர்: 133 இதழ்: 14 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

# கொழும்பு மறைமாவட்டத்தை பொறுப்பேற்கும் புதிய பேராயர்



கொழும்பு மறைமாவட்டத்தின் பேராயரான அதி. வந்தனைக்குரிய மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் ஆவணி 5ம் திகதி புதன் காலை 9 மணிக்கு கொழும்பு லூசியாஸ் பேராலயத்தில் பொறுப்பேற்பார்.

இந்நிகழ்வில் இலங்கையின் ஏனைய மறைமாவட்டங்களிலிருந்து ஆயர்கள், குருக்கள், துறவிகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மிகவும் துடிப்போடு பணியாற்றும் ஆர்வம் கொண்ட புதிய ஆயர் மேற்கொள்ளவிருக்கும் பணி மிகவும் சவால் நிறைந்தாலும் அதேவேளை கிறிஸ்துவின் சாட்சியாக, நல்ல ஆயனாக பணிபுரிய வாய்ப்பு அதிகம் உண்டென்பதை உணர்கின்றோம்.

"புன்னகையே சமாதானத்தின் முதல்படி" எப்பொழுதும் மலர்ந்த முகத்துடனும்; புன்னகையுடனும் உரையாடி மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தவர்.

புதிய மேய்ப்பு பணியை மேற்கொள்ளவிருக்கும் ஆயருக்கு ஆன்ம வலிமையையும் உடல் சுகத்தையும் வழங்கி பல்லாண்டு காலம் பணிபுரிய செபத்துடன் நிறைந்த வாழ்த்துக்களை பாதுகாவலன் நெஞ்சங்களும், யாழ் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் யாவரும் வாழ்த்துகின்றோம்.

## விடைபெற்றுச் செல்லும் பேராயர்



யூலை 27.07.2009 கொழும்பு மறைமாவட்டத்தில் கடந்த நீண்டவருடங்கள் பணியாற்றி ஓய்வு பெறும் பேராயருக்கு நன்றி செலுத்தும் முகமாக திருப்பலி ஒப்புக்கொடுத்து தமது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்தார்கள்.

பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் யூலை 27.07.2009 கொழும்பு மறைமாவட்ட 8வது பேராயராக பொறுப்பேற்றார். இவர் 28 வருடங்கள் கொழும்பு அதிமேற்றாசனத்தின் உதவி ஆயராக பணிபுரிந்து பின்பு 7 வருடங்கள் கொழும்பு மறைமாவட்டத்தின் பேராயராக பணிபுரிந்தார். இவர் 51 வருடங்கள் குருத்துவ வாழ்வும் 41 வருடங்கள் ஆயராகவும் பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது. இத்தருணத்தில் இளைப்பாறும் பேராயருக்கு யாழ் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவரும செபத்தோடு கூடிய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## மீண்டும் உரோமாபுரிக்கு...



உயர்கல்விக்காக அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகள் உரோமாபுரி செல்லுகின்றார். புனித சவேரியார் குருமடத்தின் உப அதிபராகவும், விரிவுரையாளராகவும் நீண்ட காலம் பணியாற்றிய அருட்தந்தை அவர்கள் உயர் கல்விக்காக இவ்வருடம் உரோமாபுரி செல்லுகின்றார். இவர் கடந்த பல மாதங்களாக பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராக பணிபுரிந்தார். தன்னுடைய சிறப்பான ஆற்றலினால் பாதுகாவலன் பத்திரிகையின் வளர்ச்சிக்கு சிறப்பான பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் மேற்கொள்ள இருக்கும் உயர் கல்விக்கு பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## குருத்துவத்தின் 25வது ஆண்டு நிறைவில்



**அருட்தந்தை :- R.C.X நேசராஜா**

**பிறப்பு** :- 24.12.1953
**குருப்பட்டம்** :- 04.08.1984
**தகப்பன்** :- ஜேகப் றோமான்
**தாய்** :- மாக்றேற் நல்லம்மா
**ஆரம்பக்கல்வி** :- ஊறனி றோமன் கத்தோலிக்க பாடசாலை, சென் கென்றியரசர் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி.
**உதவி பங்கு தந்தை** :- கிளிநொச்சி
**பங்குத்தந்தை** :- புதுக்குடியிருப்பு, உரும்பிராய், கிளிநொச்சி, உயர் கல்வி பிலிப்பைன்ஸ், யாழ் மறைக் கல்வி நடுநிலைய இயக்குனர், ஆணைக்கோட்டை, குருநகர்.



**அருட்தந்தை :- பெனாட் றெக்னோ**

**பிறப்பு** :- 12.12.1955
**குருப்பட்டம்** :- 04.08.1984
**தகப்பன்** :- ஜோன் சேவியர் குலசிங்கம்
**தாய்** :- மெற்றலின் இமல்டா
**ஆரம்பக்கல்வி** :- சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை குருநகர் புனித பத்திரிசியார் கல்லூரி
**சிறிய குருமடம்** :- 14.01.1967
**கண்டி தேசிய குருமடம்** : 02.02.1975
**உதவி பங்கு தந்தை** :- யாழ் பேராலயம்
**பங்குத்தந்தை** :- அச்சுவேலி, நாவாந்துறை, பூனந்தொடுவாய், தர்மபுரம், கோணாவில்,முல்லைத்தீவு, கத்தோலிக்க தமிழ்ஆன்மீகப் பணியகம் ஜேர்மனி,பருத்தித்துறை, பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர்.



**அருட்தந்தை அந்திரேஸ்பிள்ளை சகாயநாதன்**

**பிறப்பு** :- 07.10.1958
**குருப்பட்டம்** :- 04.08.1984
**தகப்பன்** :- சுவக்கீன் பிள்ளை அந்திரேஸ்பிள்ளை
**தாய்**:- செபஸ்ரியாம்பிள்ளை திரேசம்மா
**ஆரம்பக்கல்வி** :- றோ.க. பாடசாலை சில்லாலை, புனித கென்றியரசர் கல்லூரி
**சிறிய குருமடம்** :- 13.01.1971
கண்டி தேசிய குருத்துவக் கல்லூரி :- 1.01.1976
**உதவிப்பங்குத்தந்தை** மயிலிட்டி,பேராலயம்
**பங்குத்தந்தை** :- மண்டை தீவு, புனித பத்திரிசியார் கல்லூரி (warden) புனித சவேரியார் ஆலயம் நல்லர், ஆணைக்கோட்டை, உரித்திரியபுரம், அவுஸ்ரேலியா.

## மாணவர்களைத் தேடிச் சென்ற ஆசிரியர்கள்

**புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்களது நலன்புரி நிலைய கற்பித்தல் அனுபவம்**



யாழ்ப்பாணக் கல்வி வலயப் பணிப்பாளரினால் ஒழுங்கு படுத்தப்பட்ட, இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான செயற் திட்டம் ஒன்றினை மேற் கொள்வதற்காக கடந்த 11.07.09 சனிக்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த 23 ஆசிரியர்கள் அங்கு சென்றிருந்தோம். தென்மராட்சியில் அமைந்துள்ள இராமாவில், கொடிகாமம், மிருசுவில் ஆகிய மூன்று நலன்புரி நிலையங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்துவது, அவர்களை ஊக்கு விப்பது என்பது எமது நோக்கமாக அமைந்திருந்தது. எமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டபோது (8ம் பக்கம் பார்க்க...)

## உயர்கல்விக்காக அருட்தந்தை மதி

உயர்கல்விக்காக அருட்தந்தை மதி இளம்பதி அடிகள் உரோமாபுரி செல்லுகின்றார். புனித சவேரியார் குருமடத்தில் பணியாற்றி உயர் கல்விக்காக இவ்வருடம் உரோமாபுரி செல்லுகின்றார். இவர் மேற் கொள்ள இருக்கும் உயர் கல்விக்கு பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## பரிசுத்த தந்தை 16வது பெனடிக்ற் குணமடைந்து வருகிறார்



கைமணிக்கட்டில் சிறிய காயத்திலிருந்து பரிசுத்ததந்தை குணம் பெற்று வருகின்றார். மேலும் இவர் பூரண குணம் பெற்று தமது பணி தொடர யாழ் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் அனைவரின் மன்றாட்டுக்களையும் சமர்ப்பித்துக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைய வெற்றியாளன்

மனிதா வெற்றிக்கு அடிமைப்பட்டு
தோல்விக்கு அடிமையாகிவிடாதே
முயற்சியாளனின் பிரதிபலிப்பே – நீ
காணும் வெற்றியின் இரகசியம்!

வெற்றிதான் வாழ்க்கையென்றால்
வரும் தோல்விகளை எதிர் கொண்டு
வெற்றிப் பாதைதனை செம்மையாக்கு
நீயே நாளைய வெற்றி வீரனாவாய்!

நீ ஏன் வாழ்கின்றாய் என அறிந்து
வாழ்வின் வெற்றி அடைய
நீ என்ன செய்வாய் என்பதை
அறிந்திருக்க வேண்டும்!

எதிலும் வெற்றி கண்டவனுக்கே
வெற்றி தோல்வியின் மகிமை புரியும்
தோல்வியே முதல் என்றெண்ணாமல்
வெற்றி பெற முயன்று பார்!

அ. கிறிஸ்ரியா
பழைய வேதக் கோவிலடி,
சக்கோட்டை.

## கவிதைச் சரம்

## நட்பு...

நன்றாக பழகி
நாளெல்லாம் உன்னை நினைந்து
நனவிலோ உன்னை தாங்கி
வாழ்ந்த தோழமைடா!

உன்னை நான் என்
இதயத்தில் வைத்து
கண்ணை இமை காப்பதுபோல
காத்து வந்தேனடா!

அன்பிற்கு உதாரணம் நீயடா
அரவணைப்பின் மேதையடா – நீ
என் அன்பனும் நீயடா
என் நண்பனும் நீயடா!

அ. லிஜேசியன்
சக்கோட்டை.

## மனித வாழ்வு

பார்த்தாயோ இறைவா
மானிடர் படும் துயர்
கேட்டாயோ இறைவா
மனிதர் அவலக்குரல்

கல்லறை ஒவ்வொன்றும்
கோஷமிட்டு கேட்கின்றன
சமாதான புறவுநிலை
சமத்துவம் அதிலில்லையோ
சரிந்த மரம் எல்லாம்
சத்தம் போடுகின்றன

வித்தான உடைத்தால்
நன்மைகள் ஒருபுறம்
மானிடரை நசுக்கும்
நச்சு வாயு மறுபுறம்
சீ சீ என்று
சீர்த்தூர்த்து கிளிக்கட்டம்
கிளி அரக்கனாக

கல்லறை ஆகின்றன
குடிசையிலே
தப்பிப்பதும் இல்லை
உலகெங்கும் சென்று
இலையாக செல்லாமலே

மயிலே மயிலே
மான் விழும் கண்ணீரை
தெருக்கூத்தாக
ஊரெங்கும் ஆடலே

விழுந்து எழும்
நினைவோடுதான்
விழுவர் விழுகின்றன
விடியலினை தமிழனையின
விடியல் செய்ய முடியவில்லை.

ட. திரேசியா குருதினி
இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்
இளவாலை

## அருட்பணிபுரியும் பணியாளரே

ஆயனாக இருந்து இறையரசதனை வழி நடத்துகின்றீர்
இனிய இறையன்புதனை மக்கு வெளிப்படுத்தி
கடமையுற்ற மறை சாட்சிகளாய் திகழ்கின்றீர்
உப்பாக ஒளியாக எம் வாழ்வு மலர
ஊக்கமுடன் அயராது உழைக்கின்றீர்
என்னிலடங்கா வேதனைகள் மத்தியிலும்
ஏற்புடன் இறைவனையின்செல்ல வழிசமைக்கின்றீர்
ஐயமின்றி தடைகளைத் தகர்த்தெறிந்து
ஒன்றிணைந்த குழுக்களாக நாம் வாழ்ந்திட
ஓய்வு உறக்கமின்றி உழைத்திட்டீர்
ஒளியும் பேசி அன்பாக பழகி
அதுவே இறை வழி என வாழ்ந்து காட்டிய
பணியாளரே வாழ்த்துகின்றோம்

அ. நிருசன் சில்லாலை

# பரீட்சையில் வெற்றி பெறுவதற்கான சில வழிகாட்டல்கள்

– அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம் –

### தேர்வுக்குச் செல்லும் முன்னர்

நீங்கள் தேர்வு அறைக்கு செல்லும் போது மனத்துணிவோடு செல்லுங்கள். வெற்றி பெறுவதற்கான எண்ணங்களோ உங்களது உள்ளத்தில் நிறைந்திருக்கட்டும். தேர்வுக்கு முந்தைய மாலையில் முக்கியமான கேள்விகளுக்கு மட்டும் பதில்களை படித்தால் போதுமானது. நல்ல உறக்கத்தை உறுதி செய்து கொள்ளுங்கள்.

தேர்வுகளை எதிர்நோக்கும் எல்லா மாணவர்களும் பொதுவாக கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பின்வருமாறு :

தேர்வு நடக்கும் தினத்தன்று காலையில் நேரத்துடன் எழுந்து உங்களை ஆயத்தம் செய்யுங்கள். பின்னர் சிறுநேரம் செபத்திலோ தியானத்திலோ ஈடுபடுங்கள்.

தேர்வுகளுக்கு செல்லும் தினங்களில் காலை உணவு இலேசாக இருத்தல் நல்லது. முதல் நாள் தேர்வுக்கு தேர்வு தொடங்குவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னரே அவ்விடத்திற்குச் செல்லவேண்டும். அப்போது தான் தேர்வு அறை, சுட்டு எண் ஆகியவற்றைக் கண்டுபிடித்து, குறிப்பிட்ட நேரத்தில் இடத்தில் அமர வசதியாக இருக்கும். ஏனைய தேர்வு நாட்களிலும்கூட தேர்வு தொடங்குவதற்கு பதினைந்து நிமிடங்களுக்கு முன்னரே தேர்வு அறைக்கு வரும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

தேர்வுக்குச் செல்லும் முன்னர் எழுது பொருட்களை சரிபார்த்து வரவேண்டும். இரண்டு பேனாக்கள் எடுத்து வருவது நல்லது.

அறிவியல் தேர்வுகளுக்கு பேனா மட்டுமின்றி நீங்கள் வேறு சில எழுதுபொருட்களை எடுத்துவரவேண்டி இருக்கும். பென்சில், அழிப்பான், அடிமட்டம், கருவிப்பெட்டி ஆகியவை தேவைப்படும். வீட்டிலிருந்து புறப்படும் முன்னரே அவற்றின் நிலைமையினை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

நூல்களையோ, குறிப்பேடுகளையோ எடுத்துச் செல்லுதல் எந்தவித பயனையும் விளைவிக்காது. தேர்வு நடைபெறும் இடத்திற்கு வந்த பின்னர் அமைதியாய் இருங்கள்.

தேர்வு அறைக்கு வந்ததும் உங்கள் சுட்டெண் குறிப்பிட்ட இருக்கையில் அமருங்கள். வினாத்தாள் கிடைத்தவுடன் விதிமுறைகளை கூர்ந்து கவனியுங்கள். முதல் பக்கத்தில் கேட்கப்பட்டுள்ள விதிமுறைகளை நிறைவு செய்யுங்கள். அவை சரிதானா என்று ஒருமுறை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

கலக்கமடையாது அமைதியாக கருத்துப் புரிந்து, வேகமாக கேள்விகளை படித்துப் பார்க்க வேண்டும். பின்னர் எந்தக் கேள்விகளுக்கு விடை அளிப்பது என்று நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தெரிந்தெடுக்கும்போது நீங்கள் கவனிக்க வேண்டிய சில விதிகள் : எட்டுக் கேள்விகள் கொடுத்து ஐந்து கேள்விகளுக்கு விடை எழுதுமாறு கேட்கப்பட்டால் உங்களுக்கு நன்கு தெரிந்த ஐந்து கேள்விகளை தெரிந்தெடுங்கள். அவற்றில் முதலில் எழுதுவதற்கு எவற்றை எழுதுவது உங்களுக்கு எளிதாக இருக்குமோ அவற்றை தெரிந்தெடுங்கள். ஏனெனில் முதலில் எழுதும் விடை தெளிவாகவும், சிறப்பாகவும் அமைந்தால் உங்களுக்கே உற்சாகம் தோன்றும். திருத்துவோர் உள்ளத்திலும் நல்ல எண்ணத்தை ஏற்படுத்தும். எளிய பிழையற்ற நடையில் விடையளியுங்கள். உங்களது விடைகளில் மையக்கருத்துக்களை நீங்கள் தவறாது வெளிப்படுத்த வேண்டும்.

நீங்கள் விடைகள் எழுதும் போது, அவற்றை குறிப்பிட்ட நேரத்துக்குள் எழுதி முடிக்க வேண்டும். கடைசி அரைமணி நேரத்தை விடைகளை திருப்பி பார்ப்பதற்கு ஒதுக்கிவிட்டு, எஞ்சிய நேரத்தில் அனைத்து விடைகளையும் எழுதி முடிக்கும் வகையில் எழுத வேண்டும். அதற்கான நேரக்கணிப்பை நீங்கள் திட்டமிட்டு குறித்துவைக்க வேண்டும்.

திருத்தங்கள் செய்வதற்கு பிறசோக்கை செய்வதற்கு தக்க இடைவெளி விட்டு எழுத வேண்டும்.

உங்களது எழுத்து தெளிவாக இருத்தல் அவசியம். கேள்விகளுக்கு ஏற்றபடி அவற்றிற்குரிய நேரத்திற்குள் விடை எழுதி முடிக்க வேண்டும். கட்டுரை வகை கேள்விகளுக்கு நீங்கள் பந்தி பந்தியாக பதிலளிப்பது அவசியம். ஒவ்வொரு பந்தியிலும் ஒரு குறிப்பிட்ட கருத்து தெளிவாகவும், சுருக்கமாகவும் விளக்கப்பட வேண்டும்.

உங்களது சொந்தக் கருத்துக்களை கேட்கும் கேள்வியாக இருந்தால், நன்கு சிந்தித்து, விடயப்பொருளின் இருபுறங்களையும் ஆய்ந்து, உங்களது விடையை எழுதுங்கள். கட்டுரைகளில் தர்க்க ரீதியாக தக்க காரணங்கள் காட்டி உங்களது கருத்துக்களை தெரிவிக்கவேண்டும். சுருக்கமாகவும் எழுதவேண்டும்.

இதுவரை வர்ணனை தேவைப்படும் கட்டுரை வகைக் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்தைக் கூறினோம். இனி நேரடியான குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதிலளிப்பது எவ்வாறு எனப் பார்ப்போம். தற்போது குறிப்பிட்ட பாடங்களில் மாணவர்களின் தேர்ச்சியை சோதிப்பதற்கும் பரீட்சை கையாளப்படுகிறது. பல சிறு கேள்வி கேட்கப்பட்டு மாணவர்கள் சரியான விடைகொடுக்கும் திறன் சோதிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட கேள்விகளுக்கு நான்கு (4) விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் சரியான விடையை மாணவர் குறிப்பிட வேண்டும்.

சரியான விடை அதற்குரிய மதிப்பெண்ணை பெற்றே தீரும். ஆகவே நன்கு கற்று, விபரம் அறிந்த மாணவர்கள் இம்முறையில் தக்க மதிப்பெண்களை பெற்றே தீரவேண்டும்.

பாடங்களை புரிந்து கொண்டு படித்தல், படித்தவற்றை நினைவு கொள்ளல், முன்னைய பரீட்சைகளுக்கு தரப்பட்ட கேள்விகளுக்கு பதில் எழுதி பழகிப்பார்த்தல் ஆகியவை மிக உதவியாக இருக்கும்.

விரைவாக கேள்விகளைப் படிக்கும் நுட்பத்தை மாணவர்கள் முன்னரே பயிற்சி செய்து கொள்ளுதல் நேரடிக் கேள்வி முறைக்கு பயனளிக்கும். வேகமாகப் பார்க்கும்போதே நன்கு தெரிந்த கேள்விகளை முதலில் இனம்கண்டு உடனடியாக பதில் அளிக்கவேண்டும். தெரிந்தவரை தக்க பதிலை கண்டு சுட்டிக் காட்டவேண்டும்.

எப்போதுமே நீங்கள் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் அளிப்பதற்கு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயிக்க வேண்டும். பின்னர் திரும்பிப் பார்ப்பதற்கு தக்க காலத்தை ஒதுக்க வேண்டும். கேள்விகளுக்கு பதிலளிக்க முன்னர் கேள்வியை ஒருமுறைக்கு இருமுறை படித்து புரிந்து கொண்டு தக்க பதிலை நினைவு படுத்தி எழுதுங்கள். ஏனெனில் நீங்கள் அறிந்த கேள்வியிலிருந்து சற்றே மாறுபட்டதாக தேர்வுக் கேள்வி அமைந்திருக்கலாம். ஆகவே, பதிலும் மாறுபடலாம். எனவே கேள்வியை முழுமையாக படித்து நன்கு புரிந்து கொண்டபின்பே எழுதுங்கள். இவற்றை மனதில் கொண்டு அமைதியோடும், நம்பிக்கையோடும் விடையளிப்பீர்களேயானால் வெற்றி உங்களை நாடி வரும்.

# யாழ் மாநகரசபை தேர்தல் – விழிப்போடு எதிர்கொள்வோம் –

எதிர்வரும் ஓகஸ்ட் 8ம் நாள் யாழ் மாநகர மக்கள் மாநகரசபைத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டியுள்ள ஒரு சூழ்நிலையில் யாழ் மறைக்கோட்ட பொது நிலையினர் கழகத்தினராகிய நாம் எம் கத்தோலிக்க நம்பிக்கையாளருக்கும் ஏனையோருக்கும் பின்வரும் செய்தியை முன்வைக்க விரும்புகின்றோம்.

நடந்து ஓய்ந்து போயிருக்கின்ற பெரும் போர் ஒன்றின் முடிவை உள்வாங்கி எம்மை சுதாகரித்துக் கொள்வதற்கு முன்பாகவே எம் முன்பாக இத்தேர்தல் வைக்கப்படுகின்றது. இருப்பினும் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் வாழ்வில் தேர்தல் வழி அவசியமானதொன்றாக உருவாகியிருக்கும் இன்றைய நிலையில் இத்தேர்தலில் எம்மை நாம் ஈடுபடுத்திக் கொள்வது தவிர்க்க முடியாததாகின்றது.

இந்நிலையில் இது ஒரு மாநகரசபையின் தேர்தலாகவே அமைந்துள்ள போதிலும் அதற்கு அப்பாற்பட்ட அரசியல் முக்கியத்துவத்தை பெறுவதையும் அவதானிக்கின்றோம். அண்மைக்காலமாக குறிப்பாக கடந்த ஆறு மாதங்களாக தமிழ் மக்கள் எதிர்கொள்ள நேர்ந்த பேரவலத்தை, பேரழிவை நியாயப்படுத்த இத்தேர்தல் முடிவுகள் பயன்படுத்தப்பட்டு விடுமோ என்ற நியாயமான அச்சமும் தலைதூக்குகிறது. ஆகவே பின்வரும் வேண்டுகோள்களை முன்வைக்க விரும்புகின்றோம்

### போட்டியிடும் தரப்புகளுக்கு

எஞ்சியிருக்கும் தமிழ் தலைமைகள் அனைத்தும் ஓரணியில் இணைந்து தமிழ் மக்களுக்கான அரசியல் ரீதியான தீர்வுத் திட்டம் ஒன்றை ஒத்த கருத்துடன் வழங்கவும், இடம்பெயர்ந்து வாழும் மக்களை கூடிய விரைவிலே மீளக் குடியமர்த்த போதிய அழுத்தங்களைக் கொடுக்கவும் வேண்டியுள்ள சூழ்நிலையில் இத்தேர்தலைத் தனித்தனித் தரப்பாக நீங்கள் எதிர்கொள்ளுகின்றீர்கள். ஆகவே ஒரு மாநகரசபைக்காக எதிர்கால தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நன்மையை பலியிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். ஆகவே எதிர்கால பொது வேலைத்திட்டம் ஒன்றுக்கு பங்கம் ஏற்படும் வகையில் தேர்தல் பிரச்சாரங்களை ஒருவர் மீது ஒருவர் சேறு வாரியிறைக்கும் சந்தர்ப்பமாக பயன்படுத்தாமல் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த எதிர்காலத்தை மனதில் கொண்டு இத்தேர்தலைக் கடந்து போகுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் எதிர்காலத்தில் நீங்கள் அனைவரும் ஒரு தரப்பாக இணைந்து செயற்பட வேண்டும்என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பு என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் மக்களின் மனநிலையை புரிந்து கொண்டு அளவுக்கதிகமான ஒலிபெருக்கிப் பாவனைகளாலும், சுவரொட்டிப் போராட்டங்களாலும் அவர்களின் வேதனையை அதிகரிக்காமல் அமைதியாக ஆனால் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் உங்கள் கருத்துக்களை முன்வைக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இன்னும் இது ஒரு நியாயமான தேர்தலாக நடக்க வேண்டும் என்பதைக் கொண்டு எல்லா விதமாக வன்செயல்களையும், அச்சுறுத்தல்களையும் தவிர்த்து கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளும் ஜனநாயகப் பண்பாட்டில் அனைவரும் வளர ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### வாக்காளர்களுக்கு

★ உங்கள் வாக்குகள் தமிழ் மக்களின் எதிர்கால ஒட்டுமொத்த தேசிய நலனுக்கு பங்கம் ஏற்படாத வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

★ இது ஒரு மாநகரசபை தேர்தல் மட்டுமே என்பதை மனதில் கொண்டு உங்கள் நகரத்தின் நலன்களில் அக்கறை எடுக்கக்கூடிய உங்கள் மத்தியில் வாழும் உங்களுக்கு அறிமுகமான, நல்ல நேர்மையாளர்களான உறுப்பினர்களைத் தெரிந்தெடுப்பது அவசியம் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

★ உங்கள் சமய, சமூக, பிரதேச நலன்களில் அக்கறை கொண்டுள்ள பொறுப்புள்ள தலைவர்களில் கவனம் செலுத்துங்கள்.

★ உங்கள் வாக்கை தவறாது பொறுப்புணர்வோடு அளிப்பதன் மூலம் உங்கள் மக்களாட்சி கடமையை நிறைவேற்றுங்கள்.

★ மொத்தத்தில் இத்தேர்தல் ஒரு நேர்மையான மக்களாட்சி பண்பாட்டில் வளர எமக்கு உதவி செய்யட்டும்.

யாழ் மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கரித்தாஸ் கியூடெக்
யாழ் கத்தோலிக்க திருச்சபையின் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம்
HUDEC Caritas
Tel.ph: 021-2222571, 7314 Fax: 021-2228950 Email: hudec@... Website: www.hudecjaffna.org


# வாழ்வாதாரதிட்டத்தினரின் செயற்பாடுகள்



கரித்தாஸ் - கியூடெக நிறுவனத்தினால் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் பட்டினசபை வீதி, சங்கானையில் ஆண்கள்,பெண்களுக்கான தையல் பயிற்சி நெறி 16.06.2009 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் 10 ஆண்களும், 60 பெண்களும் பயிற்சி பெறுகின்றனர்.



நவீல்ட் பாடசாலை, கைதடியில் தங்கி கல்விகற்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச்சேர்ந்த 19 மாணவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவம் மற்றும் அங்கு கல்வி பயிலும் ஏனைய 141 மாணவர்களின் நலன்கருதியும் கறவையின பசுமாடுகள் 04, ஆடுகள் 10, கோழிக்குஞ்சுகள் 200, தையல் இயந்திரம் 02, கணனி 02, பிறிண்டர் 01, மின்சாரநீரிறைக்கும் இயந்திரம் 02 என்பன 13.07.09 அன்று வழங்கப்பட்டது




கரித்தாஸ் - கியூடெக் நிறுவன அனுசரணையுடன் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஊடாக தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்து கொண்ட 10 பெண்பிள்ளைகளுக்கு 17.07.2009 அன்று செட்டியார்மடம் அராலியில் தையல் நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## தொழில் முயற்சியாளருக்கான பயிற்சி




கியூடெக் - கரித்தாஸ் ஒருங்கிணைப்பு செயல்த்திட்ட 25 சிறுதொழில் முயற்சியாளருக்கான பயிற்சி பட்டறையில் ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெற்று கொண்டிருக்கும் பயிற்சி பாளரும் வளவாளர் செல்வி திருவருட்செல்வியுடன் நிறுவனப்பணியாளரும் கூடி நிற்கும் காட்சி

## தலைமைத்துவப் பயிற்சிகள்



சக்கோட்டை, சாவகச்சேரி பொது மண்டபத்தில் கியூடெக் - கரித்தாஸ் குழுத் தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியில் கலந்து கொண்டோருடன் வளவாளர் அருட்பணி ரொகான் பயிற்சியளிக்கும்காட்சி


## கரித்தாஸ் – செடெக்கின் மீளாய்வு





கரித்தாஸ் - செடெக் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட மீளாய்வுச்சந்திப்பில் புனிதநகர், பருத்தித்துறை, நெல்லியடி, சாவகச்சேரி, பேயிட்டி, மாதகல், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குழுக்கள் சந்திப்பின்போது மீளாய்வுக்குழுவினர் மக்களோடு கலந்துரையாடும் காட்சி.

## மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டம்



தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் பிரதேச செயலர் திரு.எஸ். முரளிதரன் தலைமையில் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட மனித உரிமைகளும் கடமைகளும் கருத்தமர்வில் சட்டத்தரணி றெமீடியஸ் அவர்கள் சட்டமும் சமூகமும் என்ற தலைப்பில் உரையாற்றுவதையும் அதில் பங்குபற்றிய கிராம உத்தியோகத்தர்களையும் காண்கிறீர்கள்.

"துண்டுபட்ட தனிமனிதன்அல்ல ஒன்றுபட்டு மனிதகுலம் முன்னேற வேண்டும்" (பாப்பிறை ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு.யே.அ.அருள்தாசன்

## பொதுக்காலம் 21ம் ஞாயிறு

''இயேசுவே உம வார்த்தையால் எம வாழ்வு வளம் பெறுமே, நாளுமே அந்தப் பாதையில் கால்கள் நடந்திடுமே''

''சீமோன் பேதுரு மறுமொழியாக, ''ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம் மிடம்தானே உள்ளன'' என்றார். (யோவா 6:68)

தூய பேதுரு திருச்சபையின் முதற் தலைமை ஆயராகக் கிறிஸ்துவாலேயே நேரடியாக நியமிக்கப்பட்டார். தலைமை ஆயர் திருச்சபையின் விசுவாச வாழ்வின் காவலராகவும் கண்காணிப்பாளரும் மேய்ப்பருமாவார். திருச்சபையாகிய பிரமாண்டமான, சீர்பெற்ற உன்னத கட்டடத்தின் ஒவ்வொரு விசுவாசிகளும் கொண்டிருக்க வேண்டிய, அறிக்கையிட வேண்டிய விசுவாசத்தின் அச்சாரமாகிய தத்துவத்தைப் பேதுரு தாமே முதலில் அறிக்கையிடுகிறார். நிலை வாழ்வைத்தரவல்ல வார்த்தைகள் கிறிஸ்துவிடமே உள்ளன. ஆகவே ஒருவன் வாழ்வடைய விரும்பினால் அவன் கிறிஸ்துவையே நாட வேண்டும். மீட்பும் விடுதலையும் கிறிஸ்துவிடமே உள்ளது. இவ் பேருண்மையை திருச்சபையின் ஒவ்வொரு உயிருள்ள கற்களாகிய உறுப்பினர்கள் ஏற்று வாழ்வடைய வேண்டுமென்பதே தூய பேதுருவின் பிற்பட்ட காலப் போதனையாகவும் எதிர் நோக்காகவும் அமைந்திருந்தது.

அதற்குப் பேதுரு, அவர்களிடம், ''நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள்.'' என்றார். (திருப்பணி. 2:38)

இவ்வாறு திருச்சபையின் பிறந்த நாளாகிய பெந்தக்கோஸ்தே பெருவிழா அன்று தலைமை ஆயர் முதற் பேருரை வழங்கினார். இயேசுவின் வார்த்தைகளைப் பேருது பயன் படுத்தியபோது இயேசுவின் வல்லமை பேதுரு வழியாக வெளிப்பட்டது.

பொதுவாக சாதாரண வார்த்தைகளுக்கே ஒரு சக்தியுண்டு. அதிகாரமுடைய ஒருவரின் கட்டளை வார்த்தைகளால் மிகப் பெரிய விளைவுகளும், நிகழ்வுகளும் அரங்கேறுகின்றன.

உறவுக்கும் அடிப்படையாக வார்த்தைகளே அமைகின்றன. ஒருவரை வாழ்த்திச் சொல்லும் வார்த்தையால் மகிழ்ச்சியும், பாராட்டிக்கூறும் வார்த்தையால் உட்சாகமும் நன்றியின் வார்த்தையால் மனநிறைவும் உண்டாகின்றன.

மனித உயிரின் தோற்றுவாயும், வாழ்வுமான குடும்பமும் வார்த்தையாலேயே கட்டப்படுகின்றது. மனவாக்குறுதியாலேயே திருமண உறவும் உறுதிப்படுத்தப்படுகின்றது. ''......இன்பத்திலும், துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் நான் உமக்குப் பிரமாணிக்கமாயிருந்து வாழ்நாளெல்லாம் உம்மை, நேசிக்கவும் மதிக்கவும் வாக்களிக்கின்றேன்.'' என்ற வார்த்தையின் நம்பகத் தன்மையை அடிப்படையாகக் கொண்டதே குடும்பம் என்ற கோயில். இதுவே திருமண அருட்சாதன வாழ்வுக்கு அடிப்படையாகும்.

''கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருங்கள். திருமணமான பெண்களே ஆண்டவருக்குப் பணிந்திருப்பது போல உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள். திருமணமான ஆண்களே, கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல நீங்களும் உங்கள் மனைவியிடம் அன்பு செலுத்துங்கள். ஏனெனில் கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தி, அதற்காகத் தம்மையே ஒப்புவித்தார்.'' (எபேசி : 21,22,25)

ஆகவே மணவாளனாகிய கிறிஸ்துவுக்குக் கட்டுப்பட்டு மணமகளாகிய திருச்சபையும் அவருக்கு அனைத்திலும் எப்போதும் பிரமாணிக்கமாகத் திகழ வேண்டும்.

திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கொடுக்கும் பிரமாணிக்கமான பக்தி பற்றுதல் வாயிலாக கிறிஸ்தவ வாழ்வின் உண்மைத்தன்மை கணிக்கப்படும்.

''........ இதை என் நினைவாகச் செய்யுங்கள்....'' என்ற திருப்பலிக்கான அழைப்பினை ஏற்கும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் அதில் ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும் பங்கெடுக்க வேண்டும். ''ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்; உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.'' (மத் 6:44) என்பதற்கேற்ப மன்னிப்பிற்கு எமது உண்மைக் கிறிஸ்தவம் எம்மில் மலர்கிறது. கிறிஸ்து எம்மில் வாழ்கிறார். இறையரசு எம்மை ஆட்சி செலுத்துகிறது.

## பொதுக்காலம் 22ம் ஞாயிறு

''என்வழி அல்ல, உம்வழி செல்ல, என்னை வழிநடத்தும் இறைவா''

''மனிதக் கட்டளைகளை கோட்பாடுகளாகக் கற்பிக்கின்றனர். இவர்கள் என்னை வழிபடுவது வீண்'' என்று அவர் எழுதியுள்ளார். நீங்கள் கடவுளின் கட்டளைக் கைவிட்டு மனித மரபை பின்பற்றி வருகின்றீர்கள்'' என்று அவர்களிடம் கூறினார்'' (மாற் 7:7-8)

சட்டங்கள், ஒழுங்குகள் யாவும் மனிதனால் வாழ வாழ்வின் நிறைவைக் காண அவனுக்கு உதவவேண்டும்.

நியமங்கள், சட்டங்கள், ஒழுங்குகள், சம்பிரதாயங்கள் இவற்றின் நோக்கமறியாது அதன் சொற்கள், எழுத்துக்களை மட்டும் கருத்திலெடுத்து தண்டனையிலிருந்து தப்புவதற்காகவும் அவற்றை அனுசரிப்பது கரும்பின் வெறும் சக்கையை வாயில் வைத்துக் கொண்டு அதன் இனிய சாற்றை வெளியில் துப்புவதற்கு ஒப்பான பயனற்ற செயலாகும்.

பொது நன்மையைக் கருத்தில் எடுத்து சட்டங்கள், ஒழுங்குகள் எமக்குத் தரப்பட்டுள்ளன. மக்கள் மக்களாய் வாழவும் வாழ்வின் இலக்கை நிறைவை அடையவும் சட்டங்கள், சம்பிரதாயங்கள், ஒழுங்குகள், நியமங்கள் இன்றியமையாதவையாக அமைந்துள்ளது.

யாவே இறைவன் இஸ்ராயேல் மக்களிடம் தம்முடைய சட்டங்களை அவர்கள் ஏற்றுக் கடைப்பிடித்தால் மட்டுமே தாம் அவர்களின் கடவுளாக இருப்பதாக உரைத்தார்.

ஆகவே உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்கு கட்டளையிட்டவற்றை நிறைவேற்றுவதில் கருத்தாய் இருங்கள். வலமோ இடமோ விலகி நடக்கவேண்டாம். மாறாக உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்கு கட்டளையிட்டவற்றை எல்லா வழிகளிலும் நடவுங்கள். அப்பொழுது வாழ்வீர்கள். அது உங்களுக்கு நலமாகும். நீங்கள் உடைமையாக்கிக் கொள்ளும் நாட்டிலும் நெடுநாள் வாழ்வீர்கள்.'' (இணைச்சட்டம் 6:32-33)

இஸ்ராயேல் மக்கள் சட்டத்தின் எழுத்துகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து அதன் நோக்கத்தை கருத்தில் எடுத்துக் கொள்ளத் தவறியதால் அச்சட்டங்களின் பயனை அடையமுடியாமல் போயிற்று. திருச்சபையிலும் சட்டங்கள் நிறையவே உண்டு. திருச்சபையின் சட்டக்கோவையில் 1752 சட்டங்கள் உண்டு. இவற்றில் இறுதியான 1752வது சட்டமானது ஏனைய எல்லாச் சட்டங்களைப் பற்றியும் குறிப்பிடுகிறது. அதாவது திருச்சபையின் சட்டக்கோவையிலுள்ள எல்லாச் சட்டங்களிலும் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் விசுவாசிகளின் மீட்புக்காகவுமே எனக் கூறுகிறது.

எம் ஒவ்வொருவரினதும் ஆன்ம ஈடேற்றமே தலையாய இலக்காக அமைய வேண்டும்.

''ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?'' (லூக் 9:25) இவ்வாறு இயேசுதாமே ஒவ்வொரு கிறிஸ்தவனும் கைகொள்ள வேண்டிய அவசியமான பேருண்மையை தெளிவுபடுத்தி ஆன்ம ஈடேற்றத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். ஆகவே திருச்சபையின் தலையாய பணியும், திருச்சபையின் அமைப்பிலுள்ள எல்லா வளமைகள், சம்பிரதாயங்கள், சட்டங்கள், பிரமாணங்கள், பாரம்பரியங்கள், படிப்பினைகள், பக்தி முயற்சிகள் யாவும் ஆன்ம நலனையும் ஈடேற்றத்தையும் நாடி நாதமாகக் கொண்டுள்ளன. உலகையே ஆதாயமாக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்ட பிரான்சிஸ் சவேரியாருக்கு புனித லோயோலா இஞ்ஞாசியார் இயேசுவின் திருவாக்கை அடிக்கடி அவர் ஆன்மாவின் உள்ளாழம் வரையும் சென்று அவரை மாற்றும்படியாக ஒருவர் உலகம் எல்லாம் தனதாக்கினாலும் அவர் தம் வாழ்வையே இழப்பாரெனில் பயன் ஒன்றும் இல்லை என்று கூறி வந்தமையால் திருச்சபையில் சீனாவின் அப்போஸ்தலர் எனப்படும் புனித சவேரியார் உருமாற்றம் பெற்றார். உலகமல்ல ஆன்மாவே மேலானது, நிலையானது, நித்தியமானது என்ற பேருண்மையை உணர்ந்தவராய் தன் ஆன்மாவைக் காத்துக் கொள்ளவும் இந்தியா, சீனா, ஜப்பான், இலங்கை ஆகிய நாடுகளிலுள்ள எண்ணற்ற ஆன்மாக்களை கிறிஸ்துவுக்காக மீட்டெடுக்க புனித பிரான்சிஸ் சவேரியார் வேதசாட்சியாக இரத்தம் சிந்தி மரித்தார். ஒருவன் இறையாட்சிக்கு உட்படும்போது அவன் தன் ஆன்மாவைக் காத்துக் கொள்கிறான். இறையரசின் மதிப்பீடுகளை வெறுமனே சட்டத்தினால் ஏற்படுத்த முடியாது. மாறாக அன்பு, மன்னிப்பு, சகோதரத்துவம், நேர்மை, நீதி, உண்மை போன்ற நற்பண்புகளால் மட்டுமே நிலை நாட்டி அதன் மூலம் என் ஆன்மாக்களை மீட்டெடுக்க முடியும்.

# இறைவா முட்கம்பி வேலிகளுக்குள் எழும் குரல்களை நீ கேட்பாயா?

அருட்பணி. அ.பி ஜெயசேகரம்.

எல்லை கடந்த துன்பங்கள், அமக்கமுடியாத சிறுமைகள், சகிக்க முடியாத வேதனைகளின் அனுபவிப்பு அடிப்படை இறை நம்பிக்கையை ஆட்டம் காணச் செய்கிறது. வன்னி மக்கள் பட்டுணர்ந்த தவிப்புக்கள், ஏக்கங்கள், காயங்கள், சொந்த வடுகளை விட்டு தொடர்ச்சியான இடப் பெயர்வுகள், பதுங்குகுழிகள், உணவு நீர் இன்றி தவிப்புக்கள், தொடரும் பயங்கர பயணம், மீண்டும் முள்ளுக் கம்பிக்குள் அடிமை, வசதியின்றி கேவலமான வாழ்க்கை : இவை அனைத்தும் இறைநம்பிக்கையை தவிடுபொடியாக்குகிறது.

இவ்வாறு நிலையை 1947இல் வதைமுகாமில் சந்தித்த இளம் ஜேர்மன் வொல்வ்கோர்ட் எழுதுகிறான் : ''இறைவா நீ எங்கே? இறைவன் தனது இறையியலை படித்தாரா? யார் யாருக்காக அக்கறை எடுக்க வேண்டும் ஆ. இறைவா உனக்கு வயது போய்விட்டது. பழைய மரபு கொண்ட நீ எங்களது வடுக்கள்.... இறப்புக்களின் நெடிய பட்டியலைப் பார்த்து சமாளிக்க முடியுமா? உன்னை புரிவது கடினமாக உள்ளது. நினைவுகளுக்கும் மட்டும் உரித்தானவர் போல தெரிகிறது'' இவ்வாறான சூழலில் முகாம்களில் எமது மக்களின் ஆதங்கங்கள் : உன்னைத் தேடி அலைந்தோம் இடம் பெயர்ந்தோம். இறந்த கட்டிடங்கள், பதுங்குகுழிகள், சன்னங்கள் துளைத்த உடலங்கள், செல் வீச்சுக்கள் சிதைத்த மனித அவலங்கள்! ஒவ்வொரு இரவும் உனக்காக கண்ணீர் விட்டோம், ம்... சபித்தோம். அந்நேரம் எங்கே போனாய் அன்பு இறைவா? இறையியலர் உன்னைப் பெரும் முதியவராக கணிக்கிறார்கள். எமது காலத்தில் முழக்கங்கள், செல்வீச்சுக்கள், பல்குழல் பீரங்கிகள், கிபிரின் இரக்கமற்ற தாக்குதல்களுள் உனது உடல் மென்மையாகி விட்டது. உனது குரல் வலிமை குன்றி விட்டது. எங்கேயோடு இருப்பாயா! அல்லது அழகு கோபுர ஆலயங்களில் மட்டும் சிறைப்படுத்தி விட்டோமா. இன்று எமக்கு புதிய கடவுள் வேண்டும். ஒன்று பயத்திற்கும் மற்றது பாதுகாப்பிற்கும். நீ எங்கே... முட்கம்பி வேலிக்குள் மனிதம் வதைக்கப்பட்டு எழும் குரல்கள் கேட்கிறதா?

இதே அனுபவத்தில் திருப்பாடல் ஆசிரியர் : இறைவா ஏன் என்னை கைநெகிழ்ந்தாய் ஏன் உன்னுடைய முகத்தை மறைத்துக் கொண்டாய். (தி.பா. 87) எமது உடன்பிறப்புக்களின் துன்பங்களுக்குள்ளும் அவர்கள் தேடும் துணைக்கும் இறைவனின் பிரசன்னத்திற்கும் முன்னால் நாம் மௌனத்தில் உறைகின்றோம். இவைகளுக்கு சுலபமான விடைகள் இல்லை. சிலவேளைகளில் விடைகளே இல்லை. சில வேளைகளில் எம்முள் ஒரு பரந்த வெறுமையின் மௌனத்தை சகிக்கிறோம்.

எதிர்பார்ப்புக்கள் உடைவில், தோல்விகள், இழப்புகள், இறப்புக்களின் சந்திப்பில் இறைநம்பிக்கை நிலைகுலைகிறது. நம்பிக்கை தளர்விற்கு இறைவனைப் பற்றி நாம் கொண்டுள்ள படிமம், பிரதிமை, அல்லது எண்ணக் கருவு பெருங் காரணியாக அமைகிறது. எவ்வித மான இறைவனை நாம் தாங்கி இருக்கிறோம். எவ்விதமான கடவுளை நாம் வழிபடுகிறோம்? அதற்கேற்ற விதத்தில் இறை நம்பிக்கை உருவாக்கப்படுகிறது. இறைவனின் வெளிப்பாடுகள், வரலாற்றுக்கூடாக அவர் நடந்த பாதை, அவர் கொடுத்த செய்தியின் மையத்தில் நான் அவரது நிறைவான உருவத்தை காண முடியும். இறைவனைப் பற்றிய நிறைவற்ற தன்மை எம்மை அவநம்பிக்கைக்கும் இழுத்துச் செல்லும்.

வரலாற்று நிகழ்வுகளின் இறைவனைச் சந்திக்க வேண்டும். அதன் வெளிப்பாடுகளே ஆவியை உய்த்துணர வேண்டும். ஆவிக் கூட்டங்களில் வலுக்கட்டாயமாக ஆவியைக் கொணர்ந்து திருப்தி நிறைவடையும் நாம், வரலாற்றில் வெளிப்படும் இறைவனை சந்திக்க முயற்சி எடுப்பதில்லை. வரலாற்றில் ஆவியின் திருப்பயணம் (Pilgrimage of the Spirt) மிக ஒடுக்கமானது, கடுமையானது, சோகங்களில் மலிந்தது, சிறுமைகள் நிறைந்தது, குருதியில் நனைந்தது.

விவிலியத்தில் காணும் இறைவனின் பிரதிமையை, அவரின் நிறைவான தோற்றத்தை, எண்ணக் கருவை, அல்லது கடவுள் என்ன விதமானவர் என்பதை முக்கோணங்களில் பார்க்கலாம்

1. விடுதலை தாகிக்கும் கடவுள்,
2. இறையாட்சி முழங்கும் கடவுள்,
3. ஏழைகளை அன்பு செய்யும் கடவுள்

### விடுதலை தாகிக்கும் கடவுள்

விவிலியக் கடவுள் வரலாற்றுக் கடவுள் அவர் மீட்கும் கடவுள் எந்த விடுதலையும் மீட்கும் உள்ளார்ந்த ஆன்மீகம் மீட்பு மட்டுமல்ல மாறாக விவிலிய நிகழ்வுகள் சுட்டிக்காட்டுவது போல இவ்வுலகின் மானிடர் உரிமை பெற்றவர்களாக தங்களுக்கென உரிமைச் சொத்துக் கொண்டவர்களாக, நாட்டை கட்டியெழுப்புவர்களாக வாழவைக்கின்ற விடுதலை மெசியா நம்பிக்கை எதிர்பார்த்த விடுதலையும் விடுதலை கடவுளையும் சுற்றியே கட்டி எழுப்பப்பட்டன. இறைவனின் இருப்பும், தொடர் பிரசன்னமும் எவ்வித இஸ்ரவேலரின் நெடிய கால விடுதலைக்கான போராட்டத்தின் தோல்விகள், உயிர் இழப்புக்கள் மத்தியில் வைடூரியது போல் எமது மக்களின் விடிவிற்கான முன்னெடுப்புக்களின் அவர் பிரசன்னமாய் இருக்கிறார் என்பதை மறக்க முடியாது.

இஸ்ரவேல் எகிப்து நாட்டை விட்டு வனாந்தரத்தில் உணவின்றி வேதனைப்பட்ட நாட்கள் எகிப்து நாட்டில் உண்டு குடித்த வாழ்வையும் கடா இறைச்சியையும் நறுமணத்தையும் சுவைக்க ஏங்கி தவித்தார்களாம்.

(7ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்பட திறனாய்வு

## நமது மண்ணுக்கும் பொருத்தும் குறும்படம் "மலைத்தேன்"

தலைப்பு : மலைத்தேன்
தயாரிப்பு : DBICA
எழுத்துரு : செயச்சந்திரன்
ஒளிப்பதிவு : செல்வமணி
நிகழ்வு : கேரளாவில் காசர்க் கோடு என்னும் இடத்தில் ஒரு குடும்பத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் உண்மைச் சம்பவத்தை மையமாகக் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

**குறும்படம் பற்றி :–** மருத்துவ பின் விளைவினால் நடக்க முடியாது ஊனமாகிப் போன தேனு என்னும் தன் சிறுமகளைக் கல்வியில் உயர்த்தி வைத்தியராக்கி விட வேண்டும் என்ற மனஉறுதியோடும், குடிகாரக் கணவனின் உதவிக் கரம் இல்லாத நிலைபோடும் பயணிக்கும் ஒரு தாயின் உணர்வுபூர்வமான கதை.

சமூக மட்டத்தில் அவளது குடும்பம் தொடர்பான பல்வேறு கருத்துணர்வுகள் பார்ப்போரை அமைதியாக அழவைக்கிறது.

வலுவற்றோர் தொடர்பான சமூகத்தின் பல்வேறு நிலைகள் மிக அற்புதமாகவும் - யதார்த்தமாகவும் பின்னப்பட்டுள்ளன.

**வலுவற்ற தேனு தொடர்பாக :–**

✱ "எங்களுக்கு இப்படி ஒரு மகன் இருந்தால் நஞ்சூட்டி கொன்று விடுவோம்" என ஊரார்

✱ உனக்கேன் தேவையில்லாத வேலை. உழைத்து 3 வேளை சாப்பாட்டைப் போடு போதும்" என தொழிலதிபர்

✱ "இயன்றதைச் செய்வோம் பள்ளியில் சேருங்கள்" என இரங்கினாலும் சிறுமியின் வீடு சென்று கற்பிக்க வழியின்றி இருக்கும் அதிபர்.

✱ நீண்டகால தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்யப்பட்ட ஆசிரியர் தேனுவுக்கு வீடு சென்று கற்பிக்க நாள் குறித்து அந்த நாளில் அவருக்கு தூர இடத்துக்கு மாற்றத்துடன் வேலை கிடைக்க தாயின் கனவு சிதைதல்.

✱ இவ்வாறான தாய்மாரின் வாழ்வியல் போராட்டங்களை வெளியுலகுக்குக் கொணரும் வகையில் ஊடகவியலாளர்களை அழைக்க ஒருவர் மட்டும் சமூகமளித்தல்.

✱ "சமூகத்தில் இவ்வாறான அவலத்தை நான் மட்டும் கேட்டால் முடியுமா" என ஆதங்கப்பட்டு கண் கலங்கும் ஊடகவியலாளர்.

என சமகால மனித பாத்திரங்களின் சமூக நடத்தைக் கோலங்களை 20 நிமிடங்களுக்குள் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது படம்.

பங்கேற்ற பாத்திரங்கள் அனைத்தும் இயல்பாகவும், மிகத் திறமையாகவும் தமது பங்கை ஆற்றியுள்ளன.

வாழ்க்கையில் விரக்தியும் - சோகமும் கலந்த தாய் - மகள் முகபாவம், உணர்வுகள் நம்மையும் அந்த உணர்வுகளுக்குள் இட்டுச் செல்கின்றது. அனைத்து முயற்சிகளும் கைகூடாத நிலையில் தாய் தானே தன் தோளில் தேனுவைச் சுமந்து கொண்டு தினமும் பள்ளிக்குச்செல்வது கண்ணீர் வரவைக்கிறது.

சாள்ஸ் ஆரம்பப் பாடசாலையின் புதிய ஆண்டின் தொடக்க நாளில் மாணவர்கள் ஓடி ஆடித் திரிய தேனு மட்டும் தாயின் தோளில் இருந்து வருவது பார்ப்பதற்கு சோகமாக இருந்தாலும் - அவளும் அந்த அன்று அளிக்கப்படும் உற்சாகமான வரவேற்பு மகிழ்வையும் - வலுவற்றோர் தொடர்பான புதிய எழுச்சியையும் தருவதாக அமைகின்றது.

மேலும் இயற்கை அழகும் கண்ணைக்கவரும் பசுமையான

**சமூகத் தொடர்பு ஆணையம். யாழ் மறைமாவட்டம்**

சூழலும் படத்தின் காட்சிகளுக்கு மெருகூட்டுகின்றன. ஒளி - ஒலி அமைப்பு இம்மியும் பிசகாமல் அமைந்துள்ளது. குறை எனப்படுவதற்கு பெரும்பாலும் எதுவும் இல்லை யென்றே கூறலாம்.

கிராமத்திற்கு உரித்தான மெல்லிய இசையில் தாய் மகளைச் சுமந்து பாடசாலை கொண்டு செல்லும் போது ஒலிக்கின்ற

"உயிரில் கலந்து உணர்வில் வளர்ந்த உறவின் பயணம் பாரம்பா" என்ற பாடலில்

"காலம் பேசும் கண்மணி
கவலை விடு நீ"

"தடுக்கி விழுந்து தவிக்கும் போது
தாங்கும் மனது வேண்டும்."

"கல்வி உருவாக வேண்டும்
கைகள் ஒளியாக வேண்டும்."

என வரும் வரிகள் இன்று எம்மவர்களின் நிகழ்வுகளையும் நினைவு கூறவைத்து, நம் மண்ணிலும் நடந்தேறிய நிகழ்வுகளால் உடல், உள பொருளாதார ரீதியாக பாதிப்புக்குள்ளாகிப் போயுள்ள எத்தனையோ பேரின் கல்வி மற்றும் வாழ்வியல் தேவைகளில் நம்மையும் கைகோர்க்க அழைப்பதுபோல் அமைந்துள்ளது.

மொத்தத்தில் பாரிய சமூகப் பிரச்சனை ஒன்றை 20 நிமிடத்திற்குள் ஆரவாரம் இன்றி அமைதியாகத் தந்து ஒரு தாயின் மனஉறுதியை எடுத்தியம்பி பார்ப்போர் மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் இக்குறும்படம் அனைவரையும் ஈர்க்கும் என்பது உறுதி.

**இதனைப் பார்த்து பயனுற விரும்புவோர்**

யாழ்மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இவ்வார (குறுந்) திரைப்படத்தை திறனாய்வு செய்தவர் திரு. செ. அழகராஜா அவர்களுக்கு எமது நன்றிகள்

# இறைவா! முட்கம்பி... (6ம் பக்கம் தொடர்ச்சி.)

மீண்டும் அடிமை வாழ்வு கொடுத்த கசப்போகங்களுக்கு செல்ல விரும்பினார்கள். இவ்விடுதலைப் பயணம் இஸ்ரயேல் மக்களின் மனச்சாட்சியை தட்டியது, உறுத்தியது, உருவாக்கியது. அதே பாணியில் எமது விடுதலை முன்னெடுப்புக்களும் தமிழர் மனச்சாட்சியை தட்ட வேண்டும். ஒன்றிணைந்த மனச்சாட்சியை கட்டியெழுப்ப வேண்டும். தியாகங்கள் இன்றி விடுதலை பெற முடியாது என்பதையும், அதன் வழியாக வாழ்வின் உயர் மதிப்பீடுகள் மனித விழுமியங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டியது என்பதை இறைவன் எடுத்துரைக்கின்றார்.

**இறையாட்சி**

இயேசுவின் இறையாட்சி முழக்கவில் இறைவன் எப்படியானவர் என்பதை காண முடியும். இறைவனால் தரப்படும் அருள் வரமே இறையாட்சி. செயல் வழவர் பெற்ற விடுதலையும் மீட்பையும் அது குறிக்கின்றது. இயேசுவின் ஒவ்வொரு செயலும் இறையாட்சி வந்ததற்கு அடையாளமே. சருங்கச் சொல்லின் தீமை அழிந்து நன்மை நிலைநாட்டப்படுவதே இறையாட்சி ஆகும். தீமை என்பது தனி மனித பாவத்தையும், சமூகபாவத்தையும் குறிக்கின்றது. அநீதி, அடக்குமுறை, ஊழல், சுரண்டல், ஏற்றத்தாழ்வுகள் போன்றவைகள் சமூக பாவங்களாகும்! வறுமை, துன்பம், அறியாமை, அநீதி போன்ற அனைத்திலிருந்தும் விடுதலை பெறுவதற்கான மக்கள் இயக்கமே இறையாட்சி. எல்லோருக்கும் உரித்தாகும் என்கிறது புதிய ஏற்பாடு. அந்த அமைப்புக்கள் தரும் துன்பங்களின் அடையாளம் சிலுவை! அநியாயம் ஒழிக்கப்பட்டு புதிய வாழ்வு மகத்துவமான அடையாளம் உயிர்ப்பு

**ஏழைகளை அன்பு செய்யும் கடவுள்**

"ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும்" எனும் எசாயா 61:1-2 வின் கூற்றை "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும்" (லூக் 4:16) என்று இயேசு இணைத்துக் கூறுகிறார். "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும்" என்றால் இறைவனின் தனிப்பட்ட தேர்வு அழுத்தட்டு ஏழை மக்களிடம் வந்துவிட்டது என்று பொருள்.

இறையாட்சியில் ஏழைகளுக்கு முன்னுரிமை உண்டு என்று இயேசு அறிவித்தார். ஏழைகள் பேறு பெற்றவர்கள் என்று இயேசுவால் அழைக்கப்படுவது புனிதமானவர்கள் என்பதற்காகவல்ல மாறாக, எல்லோராலும் அவர்கள் ஒடுக்கப்பட்டதனால். இயேசுவின் காலத்தில் ஏழைகள் சார்பு எடுப்பது ஆபத்தான செயல் தற்பொழுதும் தொடர்கிறது. பயங்கரவாதம் என்ற பெயரில் எமது நாடும் சில பன்னாடுகள் இதற்கு துணை போகிறது. ஏழைத் தமிழருக்காக சார்பு நிலை எடுத்தால் அது ஆபத்தானது. இன்றைய உலகில் ஏழைகளுக்காகவும் ஒடுக்கப்பட்டவருக்காகவும் சார்பு எடுக்க வேண்டியது இயேசுவின் சீடராகிய எமது கடமை. அப்போது சிலுவை நிச்சயம் உண்டு. இச்சூழலில் ஒரு மாற்று உலகம் படைக்க, உலகெங்கும் உள்ள ஏழை எளியவர் கூட்டணியும் அவசியமாகிறது. இதனைப் பறைசாட்டு உருவாக்குவதை எமது ஆன்மீகம் கடமையாக்குகிறது. இம் மூன்று வழிகள் மூலம் இறைவனின் நிறைவான உருவத்தை நாம் உணர்ந்து செயற்பட அழைக்கப்படுகிறோம்.

27 வது பிறந்தநாள் ஞாபகார்த்தமும் 2ம் ஆண்டு நினைவலைகளும்



செல்வி. ஜெனா ஹரிஷமைந்து
ஜேசன் அன்ரனி
மண்ணில் :- 05.08.1982
விண்ணில் :- 08.07.2007

ஜெனா! முகம் தெரியா உன் அன்பில் என் உறவை ஜென்மத்துக்கு தேடுகிறேன்?? ஜெனா மறைந்தாலும்; மாண்புடன் வாழும் உன்மெதில் மருவி நீ நின்றதால் உன் அன்பால் இதயம் இணைத்தாயே... நினைவால் கலங்குகிறோம்
அன்பு முகம் தேடி... (Advt 58/09)
என்றும் உன் நினைவில் குடும்பத்தினர் (A.M)

5ம் வருட நினைவஞ்சலி



திருமதி. உபகார தீர்த்தா கொலின்ஸ் (ராணி)
மண்ணில் 02.01.1940
விண்ணில் 02.08.2004

இதயக் கோவிலின் இன்பமாய் குடியிருக்கும் இனிய தெய்வமே - அம்மா இந்து ஆண்டுகள் ஆனதம்மா உலகைப் பிரிந்து - ஆனாலும் உன் அன்பின் புன்னகை

உன் கைப்பிடித்து நாம் நடந்த காலங்கள் நீ ஊட்டிய உணவின் சுவை இன்னமும் பசுமையாய் உள்ளதம்மா பாசமிகின் நாம் இவ்வாறு ஆறுதல் ஆண்டவனின் இளைப்பாற அனுதினமும் வேண்டுகின்றோம்

B4 F12 புளூமெண்டேல் தொடர்மாடி கொழும்பு.

திரு. வில்லியம் கொலின்ஸ், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள். (Advt 53/09)

## உடலோடும் ஆன்மாவோடும்... (3ம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கி வந்து, எங்களுடன் பயணிப்பதை அவளது வெளிப்படுத்தல்கள் மூலமாக நாம் கண்டு கொள்ள முடிகிறது. தனது பிள்ளைகளின் கண்ணீருக்கும் வேதனைகளுக்கும், தன் திருமகன் கிறிஸ்து மூலமாக ஆறு தலளிக்க அன்னை எங்கள் எல்லோரையும் தேடிவரும் அந்த உன்னத பாக்கியத்தை, அவளது பிரசன்னத்தை இன்று நாம் அனுபவிக்கிறோம் என்பதே பேருண்மை. மரியன்னை நமக்கோர் முன்மாதிரி, அன்னை மரி நமக்கோர் அடையாளம், நம் தாய் மரி நமக்கோர் நம்பிக்கை. அவளை எம் வாழ்வில் பிரதிபலித்து இயேசுவின் வழியில் செல்வோம்.

## திருமண வாழ்வை அறிந்து தெளிந்து மகிழ்வாய் வாழ

### 1) திருமணச் சம்மதம்

- திருமணம் ஒரு உடன்படிக்கை
- திருமணம் ஒரு அருட்சாதனம்
- திருமணத்தை செல்லுபடியற்றதாக்கும் காரணிகள்

### 2) திருமணத்தின் அடிப்படை பண்புகள்

- ஒருமைப்பண்பு
- முறிவுபடாத் தன்மை

### 3) திருமணத்தின் நோக்கங்கள்

- மணமக்களின் ஒன்றிணைப்பு
- மகப்பேறு மற்றும் குழந்தை வளர்ப்பு

### 4) மணவாழ்வில் மகிழ்ச்சியும் பிரச்சனைகளும்

- பெற்றோர் பிள்ளைகள் மட்டிலும் பிள்ளைகள் பெற்றோர் மட்டிலும் உள்ள கடமைகள்
- கணவர் மனைவி எதிர்பார்ப்புக்கள்.

## திருவிவிலிய அறிவுப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய பங்குகள்.

புனித பவுலின் இரண்டாயிரமாம் ஆண்டு யூபிலியை முன்னிட்டு யாழ் மறைமாவட்டத்தில் வேதாகம வினாவிடைப் போட்டி கடந்த 06.07.2009ல் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது. முதலில் பங்கில் மறைக்கோட்டங்களில் வெற்றி பெற்ற மாணவர்கள் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். திருத்தூதர் நூல், தூய பவுலின் திருமுகங்களில் ஐந்து பிரிவாக மாணவர்கள் வயதெல்லை அடிப்படையில் பிரிக்கப்பட்டு இப் போட்டிகளில் தோற்றினார்கள். மாணவர்கள் மிகவும் ஆர்வமுடன் தங்களுக்குரிய பாடத் திட்டத்தைப் பிரித்து போட்டிகளில் பங்குபற்றியமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

| பிரிவு | இடம் | பங்கு |
| --- | --- | --- |
| பிரிவு I | 1ம் இடம் | நாவாந்துறை |
| | 2ம் இடம் | பண்டத்தரிப்பு |
| பிரிவு II | 1ம் இடம் | நாவாந்துறை |
| | 2ம் இடம் | உரும்பிராய் |
| பிரிவு III | 1ம் இடம் | கரவெட்டி |
| | 2ம் இடம் | உரும்பிராய் |
| பிரிவு IV | 1ம் இடம் | பெரியவிளான் |
| | 2ம் இடம் | பாஷையூர் |
| பிரிவு V | 1ம் இடம் | பருத்தித்துறை |
| | 2ம் இடம் | பாஷையூர் |

க. ஜெயராணி
மறைக்கல்வி நடுநிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009ம் ஆண்டு ஆவணி திருவிழாவுக்கான மடு பரிபாலகரின் ஊடக வெளியீடு

மடுத்திருப்பதியின் இவ்வருட ஆவணித் திருவிழாவானது வழமையான நிகழ்வுகளோடு ஆவணி மாதம் 15ம் திகதி இடம்பெறும். யாத்திரிகர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மடுறோட் ஊடாக தங்கள் வாகனங்களில் உட்செல்ல முடியும். ஆயினும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளில் பயணிக்கும் யாத்திரிகள் மடுறோட் வரை சென்று, பின்பு மடுவிற்கும், மடுறோட்டுக்கும் இடையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட போக்குவரத்து சேவை மூலம் மடுவை சென்றடைய முடியும். தனியார் வாகனங்களில் பயணிக்கும் யாத்திரிகர்கள் தங்களுடைய வாகன அனுமதிப் பத்திரங்களோடு அவ்வாகனத்தில் பயணம் செய்வோரின் அடையாள அட்டை இலக்கங்கள் உள்ளடங்கிய மூன்று பெயர் பட்டியல் பிரதிகளை எடுத்துச் செல்ல வேண்டும்.

பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆவணி மாதம் 06ம் திகதியிலிருந்து 11ம் திகதி வரை பயணிக்கும் யாத்திரிகள் இரவில் மடுவில் தங்கமுடியாது. இந்நாட்களில் மடு றோட்டிலிருந்து மடுவிற்குக் காலை 06 மணிக்கு பின் உட்செல்ல முடியும். இவ்வாறு செல்பவர்கள் இரவு 09 மணிக்கு முன் மடுவிலிருந்து திரும்ப வேண்டும். இந் நாட்களில் காலை 11 மணிக்கும், மாலை 04 மணிக்கும் சிறப்புத் திருப்பலிகள் தமிழ், சிங்கள மொழிகளில் இடம்பெறும்.

ஆயினும் 12ம் திகதியிலிருந்து 16ம் திகதி வரை யாத்திரிகர்கள், மடுவில் தங்குவதற்கு அனுமதிக்கப் படுவார்கள். இந்த நாட்களில் வழமை போன்று 6.30 மணிக்கு மாலை ஆராதனைகள் இடம்பெறும்.

மதவாச்சி சோதனை நிலையத்தின் ஊடாகப் பயணம் செய்யும் யாத்திரிகர்கள், ஆவணி 06ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரை இச் சோதனை நிலையத்தைக் காலை 06 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கு இடையிலும், 12ம், 13ம் திகதிகளில் காலை 06 மணிக்கும் பிற்பகல 04 மணிக்கு இடையிலும், 14ம் திகதி காலை 06 மணிக்கும் பிற்பகல் 06 மணிக்கும் இடையிலும், 15ம் திகதி அதிகாலை 03 மணியிலிருந்து பிற்பகல் 04 மணி வரைக்கும் கடக்க முடியும்.

இம்முறை மடுவிற்குள் வரும் யாத்திரிகர்கள் போதுமான அளவு உணவுப்பொருட்கள், விறகு, குடி தண்ணீரையும் தங்களுடன் எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் மதுபானம், ஐஸ் கிறீம், விளையாட்டுப்பொருட்கள என்பவற்றை மடுவிற்குள் எடுத்து வருதல் முற்றாகத் தடை செய்யப் பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். ஏற்படக்கூடிய அசௌகரியங்களை நல்லமனதுடன் ஏற்று, திருப்பதியில் தங்கியிருக்கும் நாட்களில் ஆன்மீக காரியங்களில் ஈடுபடுமாறு வருகை தரவுள்ள யாத்திரிகர்களை வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.



மருதமடு அன்னையின் ஆசீர் உங்களோடும் குடும்பத்தினரோடும் இருப்பதாக!

வணபிதா. ப. வ்றெட் டெஸ்மன் குலாஸ்
பரிபாலகர், மடு.

## யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம் புதிதாக கொழும்பு மறைமாவட்டத்தை பொறுப்பேற்கும் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்கு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தி

**பேரருட்திரு கலாநிதி மல்கம் ரஞ்சித்**
**கொழும்பு பேராயர்**

அதி வணக்கத்துக்குரிய பேராயர் அவர்களே,

தாங்கள் கொழும்பு மறைமாவட்டத்தின் மேய்ப்பராகவும், இலங்கைத் திருச்சபையின் தலைவராகவும் இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டதையிட்டு யாழ் மறைமாவட்டத்தின் பொதுநிலை இறைமக்களாகிய நாம் தங்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் பணியும், இறைபக்தியும், அனுபவமும், அறிவாற்றலும் கொழும்புத் திருச்சபையை, இறைவனது மேலான மகிமைக்காக, இறையரசின் வளர்ச்சிக்கான ஒரு சக்தி வாய்ந்த சாட்சியாக வழி நடத்துவதற்கு தங்களுக்குப் பெரிதும் துணைபுரியும் என்பதை எமது ஆழ்ந்த நம்பிக்கை.

மேலும் தேசிய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தாங்கள் தங்கள் உயர்ந்த பதவியின் செல்வாக்கைப் பயன்படுத்துவீர்கள் என்று மிகுந்த நம்பிக்கையுடனிருக்கின்றோம்.

இறை சித்தத்தால் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள இச்சிலுவையைக் கொண்டு செல்ல தூய ஆவியானவரின் கொடைகள் யாவும் தங்களுக்கு அருளப்பட வேண்டுமென்று செபிப்போம் என உறுதி கூறுகின்றோம்.

தங்கள் முயற்சிகள் யாவற்றிலும் வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துவதுடன் தேவைப்படும் போதெல்லாம் எமது ஒத்துழைப்பு தங்களுக்கு உண்டு என உறுதி கூறுகின்றோம்.

## உன் பணிக்கு நான் இதோ

"அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு எனவே அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்" (மத் 9:37-38)

**அன்பார்ந்த மாணவர்களே! எமது மண்ணில் நீண்ட வருடங்கள் இடம்பெற்ற போரினால் எதிர்காலமே கேள்விக்குறியாக இருக்கும் இவ்வேளையில் இறைவன் உன்னை அழைப்பதாக நீ உணர்கின்றாயா? "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்" என்று அழைக்கும் இறைவன் உனக்கு உறுதியளிப்பார். ஆகவே அழைத்தலை உணரும் நீ பெற்றோரின் செபத்துடனும் பங்குத்தந்தையின் வழிகாட்டலோடும் உன் அழைத்தலை வளர்த்துக் கொள்ள இன்றே வாக்குறுதி எடுத்துக்கொள்ள இறைவன் கொடுக்கும் ஒரு சந்தர்ப்பம்.**

2010 ஆம் ஆண்டு புனித மடுத்தீனார் குருமடத்தில் சேர்ந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் பங்குத்தந்தையை தொடர்பு கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு குருமட அதிபரை தொடர்பு கொள்ளவும்.

அதிபர்
புனித மடுத்தீனார் குருமடம்
யாழ்ப்பாணம்

## இடைத்தங்கல்முகாம்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சூழலில் மாணவர்கள் தொடர்பாக பல விடயங்களை அவதானிக்க முடிந்தது.

இழப்பதற்கு இனி ஏதுமின்றி எதிர்கால வாழ்வின் சூனியத்தோடு இம்முகாம்களில் தங்கியுள்ள மாணவர்கள், கல்விதான் எமது எதிர்கால வாழ்விற்கு விடிவைத் தரும் என்பதனை ஆழமாக உணர்ந்துள்ளார்கள். ஆழமான கல்வித் தேவை அவர்களுக்கு இருப்பது சகலராலும் உணரப்பட்டது. கற்றலில் அனைத்து மாணவர்களும் ஊக்கத்துடனான ஈடுபாடு கொண்டிருந்தனர். கொடிய யுத்தத்தின் உள, உடல் ரீதியான பாதிப்புக்களுடனும் பல்வேறு உள அழுத்தங்களுடனும், தாக்கங்களுடனும் காணப்படும் அவர்கள், கல்வியில் அதீத அக்கறை காட்டத் தவறவில்லை. கல்வியே தமது மூலதனம் என்ற ஆதங்கத்துடன் செயற்படும் அவர்களின் நிலையை எம்மால் பூரணமாக உணர முடிந்தது.

புதிய சூழ்ல், அச்சூழலுடன் இன்னும் முழுமையாக இசைவாக்கம் பெறாத நிலையில் நான்கு அடைப்புக்களுக்குள் சுதந்திரமற்ற பறவைகளாக தமது வாழ்வைப் பயணிக்கும் இவர்கள் இன்றும் பழைய வாழ்க்கை நிலைக்கு மீண்டு வராத மனநிலையிலேயே காணப்படுகின்றனர். போதுமான அளவுக்கு கல்வித் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும் சிறிய அளவிலேனும் அது பூர்த்தி செய்யப்பட்டிருப்பதனையும் அவர்களின் உணர்வலைகள் வெளிப்படுத்தின.

கல்வியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளத் துடிக்கும் மாணவச் செல்வங்களின் மனநிலை பாராட்டப் படவேண்டியதொன்றே. ஆனால் அவர்கள் தமது கல்வியில் முன்னேற யதார்த்த பூர்வமான தடைகள் இருப்பது கண்கூடு. கற்றற் செயற்பாட்டிற்கான பாட நூல்கள், பாடக் குறிப்புக்கள், ஆசிரிய வழிகாட்டல்கள், ஆலோசனைகள் என்பன இன்னும் பற்றாக்குறையாகவே உள்ளன என்பதனை உணர முடிந்தது.

கல்வியிலே ஊக்கம் பெற்று உயரத் துடிக்கும் இம்மாணவர்களைப் பொறுத்தவரை நல்ல கற்கக் கூடிய சூழலும், வளங்களும் பொருத்தமாக அமையுமிடத்து நிச்சயம் அவர்களால் உயர்ந்த பெறுபேறுகளை எட்ட முடியும். கல்விச் சமூகமும், கல்விமான்களும், சமூக நலன் விரும்பிகளும் இது விடயத்தில் தங்கள் கவனத்தை ஆழப்படுத்த வேண்டும் என்பதே எமது பேரவா.

**சி. ஸ்ரனிஸ்லாஸ்**
**புனித பத்திரிசியார் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

## தீவக மறைக் கோட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழக அங்குரார்பணம்

மேற்படி கழகத்தின் அங்குரார்பணம் கூட்டம் 12.07.2009 அன்று நாரந்தனை பேதுரு பாவுலு ஆலயத்தில் யாழ் மறைக்கோட்ட பொது நிலையினர் கழக இயக்குனர் அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் இடம்பெற்றது. இக் கூட்டத்திற்கு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பொது நிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி M.V.E. இரவிச்சந்திரன் அடிகளும், நாரந்தனை பங்குத் தந்தை அருட்பணி J.A. அருள்தாசன் அடிகள் மற்றும் தீவக பங்குகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

யாழ் மறைக்கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியாக தீவகம் விளங்கினாலும் சமகால சூழமைவிற்கு ஏற்ப அதை தனியாக பிரித்து தீவகத்திற்கென்று ஒரு பொதுநிலையினர் கழகத்தை ஆரம்பிக்கும் நோக்கோடு இக்கூட்டம் நடைபெறுகின்றது என்றும் இக்கழகத்தின் ஊடாக தீவக பங்குகளில் பொதுநிலையினரின் பணிகள் முனனெடுககபபடும் எனறும அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் குறிப்பிட்டார். தொடர்ந்து அருட்பணி ரவிச்சந்திரன் அடிகள் உரையாற்றுகையில் பொது நிலையினரின் அழைத்தலின் மேன்மை பற்றியும் அவர்களின் பணியின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துக்கூறி திருச்சபையின் பெரும்பான்மையாக இருக்கின்ற பொதுநிலையினர் பங்கேற்கும் திருச்சபையாக மாறி அதனுடைய வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தீவக மறைக்கோட்ட பொது நிலையினர் கழக நிர்வாகத் தெரிவு தொடர்ந்து இடம்பெற்றது.

**தலைவர்** - திரு. இ புனிதராஜ்
**செயலாளர்** - செல்வி. நி. ஜெனற் றொகானி
**பொருளர்** - திரு. ஞா. கிறிஸ்ரி

தெரிவினைத் தொடர்ந்து நன்றிச்செபத்துடன் இக்கழகக் கூட்டம் நிறைவு பெற்றது.

**செல்வி. நி ஜெனற் றொகானி**
**செயலாளர்.**

## நெஞ்சம் மறப்பதில்லை உன் நினைவை இழப்பதில்லை

**- மோ. தார்சீசியஸ் -**

யாழ் புனித மரியன்னை பேராலயத்திலே, பொது நிலையினராகிய நான் என் பணிகளை ஆற்றிய போது அருட்பணி சறாவுக்கும் (அப்போது அவர் ஒரு சாதாரண இளைஞன்) எனக்கும் நெருக்கமான தொடர்புகள் ஏற்பட்டன.

நான் அங்கு பங்கு சபையின் நீண்ட காலச் செயலாளராகவும் வழிபாட்டுக்குழு தலைவராகவும் பணியாற்றிய காலத்தில் சறாவின் தொடர்பும், ஒத்துழைப்பும் மெச்சக்கூடியவிதமாக இருந்தன. வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கு ஒப்ப அவரது சேவைகள் அன்று தொட்டே மிளிரத் தொடங்கின.

பேராலயத்தில் இடம்பெறும் குருப்பட்டங்களின் போது இவரது தலையசைப்பையும், நடையையும், குரலையும் கேட்கலாம். இத்தகைய அனுபவங்கள்தான், அவர் இறைவனின் குருவாகிய பின்னர் தன் பங்குப் பணிகளை ஆன்மீகச் செயல்களை, சமூகசேவைகளை திறமையுடனும், ஆர்வத்துடனும் துடிப்புடனும் செயல்பட உதவியது என்றால் மிகையாகாது.

சறாவின் கண்கள் நிரந்தரமாக மூடிவிட்டன. அன்று ஒலித்த குரல் ஓய்ந்துவிட்டது. உருவம் அழிந்துவிட்டது. ஆனால் அவர் ஆற்றிய கடைசி நேரச் சேவைகள் யாவரின் நெஞ்சப் பதிவுகளிலிருந்து எவராலும் அழிக்க முடியாது.

அவர் யாவரின் எண்ணங்களிலும், நினைவுகளிலும் என்றுமே சாகமாட்டார். உயிர்வாழ்ந்து கொண்டே இருப்பார். காலங்கள் தோறும் உம் நினைவோடு உமக்காய்ச் செபித்திடுவோம்.

பேரிரக்கம் கொண்ட இறைவன் இவரது இறை பணிக்கு இனிய மோட்சத்தில் இடம் அளிப்பாராக புனிதர்களின் ஐக்கியத்தில் நிலைத்திருப்பாராக.

## காவலூர் புனித யாகப்பர் பெருவிழா

ஊர்காவற்றுறை புனித யாகப்பா பெருவிழா 25.07.2009 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருவிழாத் திருப்பலியை அருட்தந்தை யெய சேகரம் அடிகளாரும், தீவகப் பங்குத் தந்தையர்களும் சேர்ந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தார்கள்.

நவநாள் மறையுரைகளை அருட் தந்தை வின்சன் அ.ம.தி அடிகளார் விசுவாச உண்மைகளை மிகவும் இலகுவான முறையில் வழங்கி சிறப்பித்தார். திருநாள் திருப்பலியின் பின் புனிதரின் திருச்சுருப பவனியும் ஆசீரும் இடம்பெற்றது. திருச்சுருப ஆசீரை காவலூர் புனித யாகப்பர் பங்கைச் சார்ந்த அருட் தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் வழங்கினார். அனைத்து வழிபாடுகளையும் அர்த்தமுள்ள முறையில் பங்குத்தந்தை ஜேம்ஸ் அடிகளார் ஆயத்தம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ் குருநகர் புனித யாகப்பர் பெருவிழா



யாழ் புனித யாகப்பா திருவிழா 25.07.2009 அன்று ஆயர் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஆயர் அவர்கள தமது மறையுரையில் புனித யாகப்பரை போன்று இறையரசை அடைவதே எமது வாழ்வின நோக்கமாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

**ஜி. பி. பேர்மினஸ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.